# சோழர்கால

# தமிழ் இலக்கண உருவாக்கம்

கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்



## முகவுரை

தமிழக வரலாற்றைச் சிறப்பித்தவர்கள் சோழர்கள். சோழமன்னர்கள் சிறந்த ஆட்சியாளராக இருந்தனர் என்பதைச் சாசனங்கள் காட்டுகின்றன. சோழர்கள் குறிப்பாக இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன், ஆகியோர் தென்னகம் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட சோழப் பேரரசின் தலைசிறந்த பேரரசர்களாக விளங்கினர். மன்னர்களுக்கும் வேதியர்களுக்கும் புலவர்களுக்கும் இடையே நெருக்கமான உறவுகள் இருந்தன. நாட்டில் பேரரசு இருக்கின்றபொழுது பேர் இலக்கியங்கள் எழ வாய்ப்புண்டாகும். பேர் இலக்கியங்கள் ஊடாகப் பெரும் தத்துவங்கள் உண்டாகின்றன. வடமொழியாளர்களுடைய செல்வாக்கு எனப் பலதரப்பட்டவர்களுடைய செல்வாக்கும் இலக்கிய, இலக்கண நூல்கள் தோன்றக் காரணங்களாயின. சோழர்காலப் பகுதியில் பல்வேறு வகையான இலக்கிய

வடிவங்கள் தோன்றின. இலக்கியங்கள் உருவாகின்ற பொழுது இலக்கண நூல்களும் உருவாக்கப்படும். அரசியல், சமூக பண்பாட்டிற்கு ஏற்ப மொழி மாறுதல் அடையும். காலத்துக்குக் காலம் மொழி மாறுகின்ற பொழுது அதன் இலக்கணமும் மாற்றமடையும். இலக்கண வரலாற்றின் ஊடாக இதனைக் கண்டு கொள்ளலாம். சோழர்காலத்தில் இலக்கணத்தின் உருவாக்கம் எவ்வாறு இருந்தது என்பதை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## சோழர்காலத்தில் எழுந்த இலக்கண நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்களான பேராசிரியர் வி. செல்வநாயகம், மு. வரதராசன் போன்றவர்களும் இலக்கண வரலாற்றாசிரியர்களும் சோழர்காலத்தில் எழுந்த நூல்களைக் குறிப்பிடும் போது சில நூல்களை தவறவிட்டு குறிப்பிடுகின்றனர். சோழர்காலத்தில் எழுந்த நூல்களை அவற்றின் காலம், பின்னணி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வரையறை செய்ய முடியம். சோழர்காலத்தில் எழுந்த இலக்கண நூல்களாக வீரசோழியம், புறப்பொருள் வெண்பா மாலை, நேமிநாதம், நன்னூல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, நம்பியகப் பொருள், வச்சிணந்திமாலை (வெண்பாப் பாட்டியல்), பன்னிருபாட்டியல், தமிழ்நெறி விளக்கம், பஞ்சமரபு என்பன அமைகின்றன.

வீரசோழியம் ஐந்திலக்கணம் கூறுகின்ற நூல். தொல்காப்பியத்தைப் பின்பற்றியும் வடமொழி இலக்கண மரபினையும், பேச்சுவழக்கு, எழுத்து வழக்கு என்பவற்றையும் நோக்காகக் கொண்டும் புத்தமித்திரர் வீரசோழியத்தை எழுதியுள்ளார். சாசனங்கள் பேச்சுவழக்கை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றிற்கு உரிய இலக்கணத்தை வீரசோழியம் குறிப்பிடுகின்றது. பேச்சு வழக்கு வாயிலாக மொழி மாற்றத்தைக் கண்டு கொள்ளமுடியும் . இதனை நன்கு உணர்ந்தவர் புத்தமித்திரனார். சங்க இலக்கியங்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கணம் தொல்காப்பியம். சங்ககாலத்திற்குப் பிறகு இலக்கியங்களில் ஏற்பட்ட மாற்றம் வளர்ச்சி பற்றி இலக்கணம் சொல்லவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

ன், அன், ஆன் என்பன ஆண்பால் விகுதிகளாகவும் அள், ஆள், இ என்பனவற்றை பெண்பால் விகுதிகளாக தொல்காப்பியம் நன்னூல் குறிப்பிடுகின்றன. கிழத்தி, மணவாட்டி என்ற எடுத்துக் காட்டுக்களிலுள்ள அத்தி, ஆட்டி என்பன பெண்பால் விகுதிகள் என்று வீரசோழியத்தார் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியம் குறிப்பிடாத புணர்ச்சி விதிகள் பலவற்றை வீரசோழியத்தில் காணலாம். இ,ஈ,ஐ என்ற உயிர்கள் நிலைமொழி ஈற்றில்

வந்து வருமொழி முதலில் நகரம் வந்து புணர்ந்தால் வந்த நகரம் ஞகரமாக மாறும் என வீரசோழியம் குறிப்பிடும். இவ்விதி தொல்காப்பியத்தில் இல்லை.

கவி + நன்று = கவிஞன்று
தீ + நன்று = தீஞன்று

நிலைமொழி ஈற்றில் ழகர ளகரங்கள் வந்து வருமொழி முதலில் தகரம் வந்து புணர்ந்தால் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் திரிந்து இரண்டும் டகரமாக மாறும் என வீரசோழியம் குறிப்பிடும். வீரசோழியம் இவ்விதியைப் புதிதாகக் கூறுகின்றது.

பாழ் + தீமை = பாட்டீமை
நாள் + தீமை = நாட்டீமை

காலப்போக்கில் மொழியில் ஏற்பட்ட மாற்றத்தை வீரசோழியம் காட்டுகின்றது. மொழியில் மாற்றம் ஏற்படும் பொழுது இலக்கணம் உருவாகும். நன்னூல், நேமிநாதம் என்பன பால்களைப் பகுக்கும் போதும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என தொல்காப்பிய மரபினையே கூறுகின்றன.

ஒருவனைக் கருதின சொல், ஒருத்தியைக் கருதின சொல், பலரைக் கருதின சொல், ஒன்றைக் கருதின சொல், பலவற்றை கருதின சொல், ஒருவனைச் சிறப்பித்த சொல், ஒருத்தியைச் சிறப்பித்த சொல் என பால் அடிப்படையிலும் சிறப்பு அடிப்படையிலும் பால் பாகுபாட்டினை பாகுபடுத்துகின்றார். இது சமூகத்தில் ஏற்பட்ட உயர்வைக் காட்டுகின்றது. நவீன இலக்கணகாரர் உயர்பால் என ஒன்றை சேர்த்து ஆறாவது பாலாக பேசுவர். இதனை வீரசோழியர் சோழர் காலத்திலேயே உணர்ந்து விட்டார். வீரசோழியர் தன்காலப் பேச்சுவழக்கிலிருந்த வடிவங்கள் யாவற்றையும் வைத்து இலக்கணம் கூறுகிறார். பேச்சுவழக்கும் இலக்கண உருவாக்கத்திற்குக் காரணமாகின்றது. தமிழ்ப் புலவர்கள் வீரசோழியத்தைப் பெரிதாகப் பயன்படுத்தவில்லை. வடசொற்கள் மிகுதியாகக் கலந்திருப்பதே காரணமாகக் கூறப்படுகின்றது. வீரசோழியம் சமூகத்தில் செல்வாக்கிழந்தற்குக் காரணம் வடமொழி கலைச்சொற்களை மிகுதியாகக் கையாண்டமையாகும். ஆனால் ஆராய்ச்சியாளர்கள் வீரசோழியத்தைத் தட்டிக்கழிக்க முடியாது. சாசனவியல் ஆராய்ச்சியாளர்களுக்கும், மொழியியலாளர்களுக்கும், நவீன இலக்கணகாரர்களுக்கும் வீரசோழியம் முன்மாதிரியாக அமைகின்றது. மொழியில் ஏற்பட்ட மாற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுத்து, சொல் என்ற இரண்டிற்கும் இலக்கணம்

கூறுவதாகவே நன்னூலும் நேமிநாதமும் அமைகின்றன. நேமிநாதம் தொல்காப்பியத்தைப் பெரிதும் பின்பற்றி எழுத்து, சொல் இலக்கணம் கூறுகின்றது. நன்னூல் தொல்காப்பியத்தைப் பின்பற்றியும் தனது காலத்தில் ஏற்பட்ட மாற்றத்தைத் தழுவியும் எழுதப்பட்டது. பதவியல் என்ற பகுதியை முதலில் நன்னூலாரே குறிப்பிடுகின்றார். தமிழ்மொழி ஒரு ஒட்டு மொழி என மொழியியலாளர் கூறுவர். அதனை நன்னூலார் அன்றே நன்கு உணர்ந்திருக்கிறார் என்பதை பதவியல் காட்டுகின்றது. ஒரு இலக்கணத்தை தனியாக வைத்து எழுதும் மரபு சோழர் காலத்தில் எழுந்தது. யாப்பு இலக்கணத்தை தனியாக வைத்து யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை என்பன எழுதப்பட்டன. சங்க மருவிய, பல்லவர், சோழர் காலப் பகுதியில் யாப்பில் ஏற்பட்ட வளர்ச்சி மாற்றங்களை யாப்பிலக்கண நூல்கள் காட்டுகின்றன. வடமொழிமரபின் தாக்கம் தமிழ் மொழியில் ஏற்பட்டது. இதனால் தண்டியலங்காரம் உருவாக்கம் பெறுகின்றது. அது அணியிலக்கணத்தைத் தனியாகக் கூறும் நூல்; நம்பியகப்பொருள் அகப்பொருள் மரபைக் கூறும் நூல்; புறப்பொருள் இலக்கணம் கூறும் நூல், புறப்பொருள் வெண்பாமாலை; பாட்டியல் நூல்களின் இலக்கணம் கூறும் நூல், பன்னிரு பாட்டியல்; வெண்பாப் பாட்டியலும் அத்தகையதே.

## காலமும் சமூகப் பின்னணியும்

இலக்கண நூல்கள் தோற்றம் பெறுவதற்குக் காலமும் அரசியல் சமூகப் பின்னணியும் காரணமாக அமைகின்றன.

அரசர்களுடைய ஆதரவும் நன்மதிப்பும் சோழகாலத்துப் புலவர்களுக்குக் கிடைத்தது. அரசர்களுடைய ஆதரவும் அரவணைப்பும் இலக்கண நூல்கள் உருவாவதற்குக் காரணமாகின்றன. வீரராசேந்திர சோழன் விருப்பத்திற்கு ஏற்ப புத்திமித்திரனார் ஐந்து இலக்கணமுடைய நூலை இயற்றினார். சோழ மன்னன் பெயராலே வீரசோழியம் எனப் பெயரிட்டார். இதனை

*"தேமேவிய தொங்கல் தேர் வீரசோழன் திருப் பெயரால்*
*பூமேலுரைப்பன் வடநூல் மரபும் புகன்று கொண்டே"*

என நூற்பாயிரம் (வீரசோழியம் நூற்பா 1) உணர்த்துவம். வீரராசேந்திர சோழன் பெயருடன் சேர்த்து இந்நூல் இயற்றப்பெற்றிருப்பதால் வீரராசேந்திரனுடைய காலம் எனவும் அரசனின் ஆதரவும் மதிப்பும் இந்நூல் உருவாக்கத்திற்குக் காரணமாகின்றது எனவும் கொள்ளலாம். வீரராசேந்திரன் காலம் கி.பி. 1063 – 1070 புத்தமித்திரனாரின் காலமும் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு எனலாம்.

திரிபுவனக தேவன் எனச் சிறப்புப் பெயர் பெற்ற மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் நேமிநாதம் உருவாக்கம் பெறுகின்றது.

*குருத்தவா மணிமுடிக் கொற்றவர் கோமான்*
*திருத்தகு மணி முடித் திரிபுவன தேவன்*

வெண்பாப்பாட்டியல் பாயிர உரையால் (வெண்பாப்பாட்டியல் பாயிரம் நூற்றபா) திரிபுவன தேவன் எனச் சிறப்புப் பெயர் பெற்ற குலோத்துங்க சோழன் காலத்தது நோமிநாதம் என்பது பெறப்படுகின்றது. இவன் காலம் கி.பி. 1178–1218 எனக் கொள்ளப்படுகின்றது. குணவீரபண்டிதரும் இக்காலத்தவரே. மூன்றாம் குலோத்துங்க சோழமன்னரால் ஆதரிக்கப்பட்ட புலவர்களுள் குணவீரபண்டிதரும் ஒருவர்.

சீயகங்கனின் வேண்டுகோளுக்கிணங்க பவணந்தி முனிவரால் நன்னூல் உருவாக்கப்படுகின்றது. சீயகங்கன் மூன்றாம் குலோத்துங்கனுக்குக் கப்பம் செலுத்திக் கொண்டு கங்க நாட்டில் அரசாண்ட குறுநில மன்னன். பவணந்தியார், மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவர். 12ஆம் நூற்றாண்டில் நன்னூல் எழுந்தது எனலாம். அரசனின் ஆதரவில் பவணந்தி முனிவரால் நன்னூல் உருவாக்கம் பெறுகின்றது.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்ற இரண்டு யாப்பிலக்கண நூல்களையும் அமிர்தசாகரர் இயற்றினார். அமிர்தசாகரர் இராஜராசன் (985–1013) காலத்தவர். வீரசோழிய உரையாசிரியர் காலம் 11 ஆம் நூற்றாண்டாகும். வீரசோழிய உரையாசிரியர் அமிர்தசாகரரைக் குறிப்பிடுவதால் அமிர்தசாகரர் பெருந்தேவனாருக்கு முந்தியவர் எனவே இவரின் காலம் 10 ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

சைன ஆசிரியர்களின் பரம்பரையினரை அருங்கலம் எனப் பெயரிட்டனர். எனவே யாப்பு இலக்கணத்தின் பெயரையும் சைன ஆசிரியர்களின் பரம்பரையினரின் பெயரையும் சேர்த்து அமிர்தசாகரர் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை எனப் பெயரிட்டார். சமண சமயத்தவரின் ஆதரவும் இராஜராஜனின் ஆதரவும் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகையின் உருவாக்கத்திற்குக் காரணங்கள் ஆகலாம்.

அகப்பொருள் இலக்கணம் கூறும் நம்பியகப்பொருள் நாற்கவிராச நம்பியால் இயற்றப்பட்டது. ஆசிரியரின் பெயரையும் இலக்கணத்தின் பொருளையும் சேர்த்து நம்பியகப்பொருள் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவர் சமண சமயத்தவர். இந்நூல் குலசேகர பாண்டியன் காலத்தையது என

சிறப்புப்பாயிரத்தால் அறியலாம். குலசேகரபாண்டியன் காலம் கி.பி. 1192–1266 எனவே நாற்கவிராஜ நம்பியின் காலமும் 12 நூற்றாண்டாகும். இந்நூலின் தோற்றத்திற்கு சமண சமயமும் அரசியலும் காரணங்களாகின்றன.

தண்டியலங்காரம் தண்டியாசிரியரால் இயற்றப்பட்டது. இந்நூல் இரண்டாம் குலோத்துங்கன் காலத்தது. இதன் காலம் 12ஆம் நூற்றாண்டாகும். தண்டியாசிரியர் சைவசமயத்தவர்.

புறப்பொருள் இலக்கணம் பற்றிக் கூறும் நூல் புறப்பொருள் வெண்பாமாலை. இதனுடைய ஆசிரியர் ஐயனாரிதனார். இது ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் எழுதப்பட்டது. பன்னிருபாட்டியல் 10 ஆம் நூற்றாண்டில் எழுந்தது. பிரபந்த மரபினைச் சுட்டுவதாகும். பிரபந்தங்களின் இலக்கணம் கூறுவது. பஞ்சமரபு என ஒரு இலக்கண நூல் இருந்தது என்றும் அது மறைந்து விட்டது எனவும் இதுவரை பேசப்பட்டு வந்தது. அண்மையில் அதன் பிரதி கிடைக்கப் பெற்றுள்ளது. வேலாம் பாளையம் திரு. வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டரிடம் ஏடு கிடைத்தது. திரு.ப. சுந்தரேசனாரால் பிரதி செய்து 1973 இல் வெளியிடப்பட்டது. ஆசிரியர் அறிவனார் எனவும் அதன் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு என்றும் கொள்ளப்படுகின்றது.

சமணம், பௌத்தம், சைவம், வைணவம் ஆகிய சமயங்களின் செல்வாக்கும் இலக்கணத்தில் மாற்றங்களை உண்டாக்கியது.

*"உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே*
*யஃறிணை யென்மனார் அவரல பிறவே*
*யாயிரு திணையின் இசைக்குமன சொல்லே"*

(தொல்காப்பியம் சொல்லதிகாரம் சூ 1)

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் மக்கள் என்று சுட்டப்படுவோர் உயர்திணை என்றும் மற்றெல்லாம் அஃறிணை என்பார். நன்னூலார் காலத்தில்

*மக்கள் தேவர் நரகர் உயர்திணை*
*மற் றுயிருள்ளவு மில்ல வுமஃறிணை* (நன்னூல் சூ 261)

நன்னூலார் காலத்தில் தேவர், நரகர் என்பனவும் உயர்திணையாகக் காட்டப்படுகின்றது. தேவர், நரகர் பற்றிய சிந்தனை உருவாக்கம் பெற்றகாலம், சைவசித்தாந்த சிந்தனை உருவாக்கம் பெற்ற காலம், ஆதலால் சைவசித்தாந்த சிந்தனை மரபு இலக்கணம் உருவாக்கத்திற்கு அடிப்படையாகின்றது. பவணந்தி முனிவர் சமணசமயத்தவர் என்றாலும் பிறசமயங்களையும்

ஆதரித்தவர் என்பது புலனாகின்றது. சமண, பௌத்த, சைவ, வைணவ மதங்களின் செல்வாக்கும் இலக்கண உருவாக்கத்திற்குக் காரணமாகின்றது. சமண சமயச் செல்வாக்கு மாத்திரம் தமிழ் இலக்கணக் கோட்பாடுகள் யாவற்றையும் கட்டுப்படுத்தின எனக் கூறமுடியாது என பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் கூறுவது இவ்விடத்தில் நோக்கத்தக்கது. (தமிழ் இலக்கண இயல்புகள் பக. 53) வைணவ ஆழ்வார்கள் பல பிரபந்த வகைகளை கையாண்டனர், வைணவ இலக்கியங்களின் வளர்ச்சியினாலும் இலக்கணம் சொல்ல வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

## இலக்கியங்களிற்கு இலக்கணம் கூறவேண்டிய தேவை

சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கணம் தொல்காப்பியம். சங்கமருவிய, பல்லவர்கால, சோழர் காலத்திலெழுந்த இலக்கியங்களை மையமாகக் கொண்டு சோழர்கால இலக்கண நூல்கள் உருவாக்கம் பெற்றன.

*இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே*
*எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே*
*எள்ளினுள் எண்ணெய் எடுப்பது போல*
*இலக்கியத்தினின்றும் எடுபடும் இலக்கணம்*

என்ற பாடலை அகத்தியனார் பாடியதாகக் கூறப்படுகின்றது.

*"இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலில்"* (நன்னூல் சூ 141)

இலக்கியத்திற்கு இலக்கணம் கூறும் மரபு நீண்ட காலமாக இருந்து வந்த ஒன்று. காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் என்பவற்றை இலக்கிய வடிவங்களாகக் கொண்டு பக்தி அனுபவங்களை வெளிப்படுத்தினர். காரைக்காலம்மையார் பக்தியை வெளிப்படுத்த வெண்பா யாப்பினைக் கையாண்டார். சைவம், வைணவம் என்பன புத்துயிர் பெற்று வளர்ச்சியடையத் தொடங்கின. சைவநாயன்மார்களும் ஆழ்வார்களும் சமய உணர்வூட்டும் பக்திப்பாசுரங்களைப் பாடினர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தியை வெளிப்படுத்தும் போது பல்வேறு இலக்கிய வடிவங்களை கையாண்டனர். பதிகம், மாலை, கோவை, தூது, உலா, மும்மணிக் கோவை, எழுகூற்றிருக்கை என பல புதிய இலக்கிய வடிவங்களைக் கையாண்டனர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தியை வெளிப்படுத்தும் செய்யுட்களை அமைக்கும் போது பல்வேறு வகையான யாப்பு வடிவங்களையும் பாவினங்களையும் கையாண்டனர். தொல்காப்பியத்தில் கூறப்படாத யாப்பு வகைகளைப் பயன்படுத்தினர். பல்வேறு இலக்கியங்கள் உருவாக்கப்பட்டன.

இத்தகைய இலக்கியங்களுக்கு இலக்கணம் சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. இத்தகைய பின்னணியிலே தான் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம் என்ற யாப்பிலக்கண நூல்கள் உருவாக்கம் பெற்றன.

தொல்காப்பியர் ஆசிரியப்பாவினை நான்காக வகுக்கவில்லை. யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகைகாரர் நேரிசை ஆசிரியப்பா, இணைக் குறளாசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என நான்காக வகுத்துள்ளனர். ஆழ்வார்கள் பாடல்களிலும் நாயன்மார்களின் பாடல்களிலும் இப்பாக்களின் வளர்ச்சியைக் காணலாம். சேரமான் பெருமான் நாயனாரின் திருவாரூர் மும்மணிக் கோவையிலும் நம்மாழ்வாரின் திருவாசிரியத்திலும் சில செய்யுட்கள் நேரிசை ஆசிரிப்பாவால் வருவதைக் காணலாம். தொல்காப்பியர் குறிப்பிடாத யாப்பு வகைகளை யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை காட்டுகின்றன. தொல்காப்பியருடைய காலத்தில் வெண்பா நெடுவெண்பாட்டு, குறுவெண்பாட்டு என்ற இருவகையே இருந்தது. யாப்பருங்கலக்காரர் விருத்திகாரர் குறள், சிந்து, இன்னிசை, நேரிசை, பஃறொடை என ஐந்து வகையான வெண்பாவினைப் பகுப்பார். காரைக்காலம்மையார் வெண்பா யாப்பினைக் கையாளுகின்றார். பல்லவர்காலத்திலும் வெண்பா யாப்பு பெரிதும் கையாளப்பட்டது. தொல்காப்பியர் பாவினம் பற்றிக் கூறவில்லை. காரைக்காலம்மையாரும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் கையாண்ட பாவினங்களை அடிப்படையாகக் கொண்டு யாப்பருங்கலம், காரிகை என்பன பாவினங்களுக்கு இலக்கணம் கூறுகின்றன.

சங்கமருவிய பல்லவர்கால, சோழர்காலம் என்பவற்றில் எழுந்த புதிய செய்யுள் வடிவங்களை நோக்கி அவற்றின் யாப்புவகைகளை இனம் கண்டு அவற்றிற்கு இலக்கணம் வகுத்தனர். இலக்கியங்களுக்கு இலக்கணம் சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்நோக்கத்தினை நிறைவு செய்யும் பொருட்டு உருவாக்கம் பெற்ற இலக்கண நூல்களே யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை எனலாம்.

வீரசோழியம் பாக்களை முன்கூறிய பெயர்களால் கூறாது வேறு பெயர்களால் வகுத்து வேறு இலக்கணம் கூறுகிறார். குறள், சிந்து, திரிபாதி, வெண்பா, திலதம், விருத்தம், சவலை என்று ஏழுவகைப்படும் என பத்தியக்கவி கூறுகிறார். இவ் ஏழும் தத்தம் இலக்கணத்தில் மிகுந்தும் குறைந்தும் வரின் போலி எனப்படும். குறட்போலி, சிந்துப்போலி, திரியாதிப்போலி, வெண்பாப்போலி, திலதப்போலி, விருத்தப்போலி, சவலைப்போலி எனவரும் என்கிறார். வீரசோழிய ஆசிரியரே புதுமுறையில் பாக்களை இவ்வாறு பாகுபடுத்துகிறார். ஏனைய யாப்பிலக்கண நூல்களில் இம்முறையினைக் காண முடியாது.

வடமொழி மரபின் செல்வாக்கும் யாப்பில் ஏற்பட்ட வளர்ச்சி மாற்றங்களுக்குக் காரணமாகின்றது. வீரசோழியர் தமிழ்மரபினையும் வடமொழி மரபினையும் பின்பற்றி யாப்பிலக்கணம் கூறுகிறார்.

வெண்பா பாட்டியல் அல்லது வச்சிணந்திமாலை என்ற பாட்டியல் நூலும், வெண்பாவினால் அமைக்கப்பட்டது. யாப்பருங்கலக்காரிகை கட்டளைக் கலித்துறை யாப்பால் அமைக்கப்பட்டது. யாப்பின் வளர்ச்சி நிலையை இவை காட்டுகின்றன.

## பிரபந்தமரபு

சங்கம் மருவிய பல்லவர்கால சோழர்காலங்களில் பல இலக்கிய வடிவங்கள் தோன்றின. திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், மும்மணிக்கோவை, திருக்கோவை, திருக்கைலாய ஞான உலா, கலிங்கத்துப்பரணி, பிள்ளைத்தமிழ் என்பன போன்ற இலக்கிய வடிவங்கள் எழுந்தன. வடமொழியில் இவற்றைப் பிரபந்தம் என்பர். தமிழ்மொழியில் இவற்றை சிற்றிலக்கிய வடிவங்கள் என்பர். பன்னிருபாட்டியல் இலக்கிய வடிவங்களுக்குரிய இலக்கணத்தைக் கூறுகின்றது.

இத்தகைய இலக்கிய வடிவங்களுக்கு உரிய இலக்கணம் சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் உருவாக்கம் பெற்ற இலக்கணநூலே பன்னிருபாட்டியல் என்பதாகும்.

## இலக்கியத்தின் பொருள் மரபு மாற்றம்

இலக்கியத்தின் பாடுபொருள் மாற்றமடைகின்ற பொழுது அதற்குரிய இலக்கணம் சொல்ல வேண்டும். தொல்காப்பியம் அகப்பொருள், புறப்பொருள் என பொருள் மரபை பிரித்துப் பேசுகின்றது. சங்க இலக்கியங்களும் அகப்பொருள் புறப்பொருள் பற்றியே பேசின. பல்லவ பாண்டிய அரசர்களின் ஆட்சியில் புலவர்கள் அரசனைப் புகழ்ந்து பாடுவதற்கு அகப்பொருள் மரபினைப் பயன்படுத்தினர். அவ்விலக்கியத்தில் அகப்பொருள் செய்தியும் இருக்கும். அதே நேரம் அரசன் பற்றிய புகழும் இருக்கும். பாண்டிக்கோவை அகப்பொருள் சார்ந்த இலக்கியம் அதேநேரம் அரசனது புகழும் பேசப்படுகின்றது. மாணிக்கவாசகரின் திருக்கோவை அகத்திணை மரபினூடாக இறைவன் புகழ்பேசப்படுகின்றது. இந்தப் பின்னணியில் நாற்கவிராச நம்பியால் நம்பியகப் பொருள் பாடப்பட்டது. அகப்பொருள், அகப்புறப்பொருள், புறப்புறப் பொருள் என பொருள்மரபு பேசப்படுகின்றது. அகப்பொருள் பெருந்திணை என்றும் கைக்கிளை, பெருந்திணை அகப்புறம் என்றும் புறப்புறப் பெருந்திணை எனவும்

பாகுபடுத்தப்படுகின்றது. நம்பியகப்பொருள் அகத்திணையியல், களவியல், வரைபியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்தாக வகுக்கப்பட்டுள்ளது. நம்பியகப்பொருளை அடிப்படையாகக் கொண்டு தஞ்சைவாணன் கோவை பாடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

வீரசோழியர் பொருள் மரபு பேசுகின்ற பொருளதிகாரத்தை பொருட்படலம் என ஒரே படலமாக அமைத்திருக்கிறார். அதில் பொருள் மரபை அகம், புறம், அகப்புறம், புறப்புறம், என நான்காக வகுத்துப் பேசுகின்றார்.

தகடூர் யாத்திரை அதியமானுக்கும் பெருஞ்சேரல் இரும் பொறை என்ற அரசனுக்கும் இடையில் நடைபெற்ற போரைக் குறிப்பிடுகின்றது. இந்நூலில் பெருந்திணைப் பாடல்கள் இருந்ததாக நச்சினார்க்கினியரின் உரையால் தெரிகின்றது. முத்தொள்ளாயிரம் புறப்பொருள் கூறும் நூல் அதில் சேரசோழ பாண்டியர்களின் புகழ் பேசப்படுகின்றது. அதில் புறப்பாடல்களுடன் தலைவன் பெயரைச் சுட்டும் கைக்கிளைப் பாடல்களும் இடம் பெறுகின்றன. இத்தகைய பின்னணியிலே தான் புறப்பொருள் வெண்பா மாலை என்ற இலக்கண நூல் உருவாக்கம் பெற்றது. புறம், புறப்புறம், புற அகம் என்ற மரபில் இலக்கணம் பாகுபடுத்தப்படுகின்றது. புற இலக்கணத்தில் அக இலக்கணம் பேசப்படுகின்றது. காலமாற்றத்தின் தேவையை இவ்விலக்கணம் புலப்படுத்துகின்றது.

## வடமொழி மரபின் தாக்கம்

வடமொழியின் தாக்கமும் தமிழ் இலக்கண உருவாக்கத்திற்குரிய காரணமாகின்றது. வீரசோழியம் வடமொழி இலக்கண நூல்களைப் பின்பற்றி இலக்கணம் கூறுகின்றது. கிரியா பதப்படலம், தத்திதப்படலம், தாதுப்படலம் என்ற கலைச் சொற்கள் வடமொழியில் இருந்து வந்தவையே. தமிழ் மொழிக்குரிய வேற்றுமையையும் வடமொழிக்குரிய வேற்றுமையையும் குறிப்பிடுகிறார். தொகைகள் பற்றிக் குறிப்பிடும் போதும் வடமொழிக்குரிய தொகைச் சொற்கள் தமிழ் மொழிக்குரிய தொகைச் சொற்கள் எனவும் வடமொழிக்குரிய புணர்ச்சி விதிகள் பற்றியும் குறிப்பிடுவார். யாப்பியலிலும் வடமொழியின் தாக்கம் இருக்கின்றது. வடமொழியில் இருந்து கதைகளையும் வருணனைகளையும் கடன் வாங்கும் தன்மை பல்லவர், சோழர் காலத்தின் பண்பாக இருந்தது.

வடமொழி மரபின் தாக்கத்தாலும் தண்டியலங்காரம் உருவாக்கம் பெறுகின்றது. பல்லவர்காலத்தில் பல வகையான அணிகள் கையாளப்பட்டுள்ளன. வடமொழி மரபின் தாக்கம் தான் அதற்கும் காரணமாகின்றது. சித்திரக்கவி, மடக்கு அணி என்பன பல்லவர் காலத்தில்

பயன்பட்டன. அவற்றையெல்லாம் தண்டியலங்காரம் குறிப்பிடுகின்றது. தண்டியலங்காரம் வடமொழி காவியாதர்சத்தினைப் பின்பற்றி தமிழில் எழுதப்பட்டது. சித்திரக்கவி, யமகம், திரிபு முதலான அணிகள் பற்றி தண்டியலங்காரம் குறிப்பிடுகின்றது. இலக்கியத்தினையும் வடமொழி மரபினையும் பின்பற்றித் தண்டியலங்கார ஆசிரியர் இலக்கணம் கூறுகிறார்.

## இலக்கண உரை மரபு

சோழர் காலப் பகுதியில் இலக்கண நூல்களுக்கு உரை எழுதப்பட்டது. உரைகளினால் இலக்கணம் மீள் உருவாக்கம் செய்யப்படுகின்றது. தொல்காப்பிய இலக்கணம் மீளவும் புத்துருவாக்கம் பெறுகின்றது. தொல்காப்பிய இலக்கணம் சோழர் காலப் பகுதியில் பேணுகை செய்யப்பட்டது. எமக்குக் கிடைத்துள்ள முழுமையான முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். பழைய இலக்கண மரபுகளை விரிவாகக் குறிப்பிடுவது. சோழர்காலத்தில் இலக்கண நூல்கள் உருவாக்கப் பெறுவதற்கு அடிப்படையாக அமைவது. தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்களாக இளம் பூரணார், பேராசிரியர், சேனாவரையர், தெய்வச் சிலையார் போன்றோர் விளங்குகின்றனர்.

தொல்காப்பியத்திற்கு முதல் உரை கண்டவர் இளம்பூரணர். இவர் உரையாசிரியர் என்ற சிறப்புப் பெயர் உடையவர். கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.. இளம்பூரணர் தொல்காப்பியம் முழுவதற்கும் உரை எழுதியவர். பேராசிரியர் 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியுள்ளார். சொல்லதிகாரத்தின் நுணுக்கமான விடயங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார். சேனாவரையர் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை கண்டவர்.

தொல்காப்பியத்திற்கு இவர்கள் உரை எழுதாவிட்டால் தொல்காப்பியம் பேணப்பட்டிருக்க முடியாது. உரையாசிரியர்கள் தொல்காப்பியத்திற்கு உரை காணும் பொழுது தமது கால வழமைகளையும் மொழி மாற்றத்தையும் சேர்த்தே உரை எழுதினர். இதனால் இலக்கண உருவாக்கம் நடைபெறுகின்றது.

மேலும் இறையனார் களவியல் எட்டாம் நூற்றாண்டில் எழுந்தது. அதற்கு உரை கண்டவர் நக்கீரர். அதன் உரை வடிவம் பத்தாம் நூற்றாண்டில் தான் எழுத்துருப் பெற்றதாகும். இறையனார் களவியலை விட களவியல் உரைக்கே முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படுகின்றது. முச்சங்கம் இருந்த செய்தியை இறையனார் களவியல் உரையே தருகின்றது. வீரசோழியத்திற்கு உரை பெருந்தேவனார் எழுதினார்.

புத்தமித்திரனாரால் எழுதப்பட்ட நூலுக்கு பெருந்தேவனார் உரை கண்டார். தமது கால வழமைகளையும் காட்டி உரை கண்டுள்ளார்.

## முடிவுரை

சோழர்காலம் இலக்கிய வரலாற்றில் பொற்காலம் என்று சொல்வது போன்று தமிழ் மொழி இலக்கண வரலாற்றிலும் அது பொற்காலம் என்றே எண்ணத் தோன்றுகின்றது. அரசர் புலவர்களின் ஆதரவும், இலக்கியங்களிற்கு இலக்கணம் கூற வேண்டிய தேவை, வடமொழி மரபு சமூக முக்கியத்துவம் மதங்களின் ஆதரவு என்பன இலக்கண நூல்கள் சோழர் காலத்தில் உருவாக்கம் பெறக் காரணங்கள் ஆயின.

## உசாத்துணை நூல்கள்


1. அருணாசலம், மு. தமிழ் இலக்கிய வரலாறு,
 9ஆம் நூற்றாண்டு, சென்னை, 1988.
2. இளவரசு. சோம. இலக்கண வரலாறு,
 தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1963.
3. இறையனார் அகப்பொருள்
 கழக வெளியீடு, சென்னை, 1953.
4. சண்முகதாஸ், அ. தமிழ் இலக்கண இயல்புகள்.
 முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம், 1982.
5. ______________ – தமிழின் பா வடிவங்கள்,
 உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், 1998.
6. செல்வநாயகம், வி. தமிழ் இலக்கிய வரலாறு,
 ஸ்ரீலங்கா, யாழ்ப்பாணம், 1956.
7. தண்டியலங்காரம் – முல்லை நிலையம், 1998.
8. தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம்,
 கணேசையர் பதிப்பு திருமகள் அச்சகம், சுன்னாகம், 1952.
9. ______________ – சொல்லதிகாரம் சேனாவரையம், கணேசையர் பதிப்பு
 திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1938.
10. ______________ – பொருளதிகாரம் பின்னான்கியல்களும் பேராசிரியரும்,
 கணேசையர் பதிப்பு திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1942.
11. நன்னூல், – நாவலர் பதிப்பு, ஆறுமுகநாவலர் வி. அச்சகம்
 சென்னை, 1966.
12. நேமிநாதம் – (பதிப்பாசிரியர் ரா. இராகவையங்கா) தமிழ்ச் சங்க
 முத்திராசாலைப் பதிப்பு, மதுரை 1928.
13. யாப்பருங்கலம் – சென்னை அரசு, 1960.
14. யாப்பருங்கலக்காரிகை – பாரி நிலையம், சென்னை, 2002.
15. வீரசோழியம் – (பதிப்பு க. குருமூர்த்தி ஐயரவர்கள்) யாழ்ப்பாணம், 1942.